# 11

# "நான் மறுத்துரைக்கிறேன்!" (3:1-8)

இந்தப்பாடம், யூதர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதன்மீது மையங்கொண்ட பகுதியை முடித்து வைக்கிறது.[1] புறஜாதியார் இழந்துபோகப்பட்டிருந்தனர் என்பதை நிலைநாட்டியதான அப்போஸ்தலரின் கலந்துரையாடல், ஒரு அதிகாரத்தின் பாதியை எடுத்துக்கொள்கிறது: பதினைந்து வசனங்கள் (1:18-32). யூதர்களை அவர் கண்டித்து உணர்த்துதல் என்பது அதைக் காட்டிலும் இருமடங்கிற்கும் அதிகமானதாக உள்ளது - ஒரு அதிகாரமும் மற்றும் இன்னொரு அதிகாரத்தில் மூன்றிலொரு பங்கும்: முப்பத்தியேழு வசனங்கள் (2:1-3:8). ஏன் இந்த வேறுபாடு? ஒருவேளை யூதர்கள் பாவிகளாயிருந்தனர் என்று அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தல் இருமடங்கு கடினமானது என்பதால் இருக்கலாம்.

இந்தப் பாடத்திற்கு 3:1-8 வேத வசனப்பகுதியாக உள்ளது. இது ஒரு சுலபமான வசனப்பகுதியல்ல. டக்ளஸ் மூ என்பவர், 3 முதல் 8 வரையுள்ள வசனங்களை, "இந்த நிருபம் முழுவதிலும் விளக்கியுரைப்பதற்கு மிகவும் கடினமான பகுதி" என்று அழைத்தார்.[2] பெரும்பான்மையான எழுத்தாளர்கள், பவுல் ஒரு உரையாடல் வடிவுருவைப் பயன்படுத்தி, கற்பனை செய்யப்பட்ட யூத எதிராளியினிடத்தில் இருந்து வரக்கூடிய மறுப்புரைகளுக்குப் பதில் அளித்தார் என்று ஒப்புக்கொள்கின்றனர். இருப்பினும், - பவுலா அல்லது அவரது எதிராளியா - யார் "பேசுகிறார்" என்பது எப்போதும் தெளிவாக இருப்பதில்லை. மற்றும், மறுப்புரைகளும் பதிலுரைகளும் மிகவும் சுருக்கமாக, ஏற்படுத்தப்பட்ட துல்லியமான கருத்துக்களைப் பற்றி சில யூகங்கள் தேவைப்படும் நிலையில் உள்ளன. இருந்தபோதிலும், அப்போஸ்தலரின் முதன்மை நோக்கம் தெளிவாக உள்ளது: யூத எதிர்ப்பை வாயடைத்தல் (2:1; 3:19 ஆகிய வசனங்களைக் காணவும்).

மறுப்புரைகளைப் பொறுத்தமட்டில், அவைகள் அனேகமாகப் பவுல் யூத ஜெப ஆலயங்களில் பிரசங்கித்தபோது கேள்விப்பட்ட குயுக்தியான சொற்புரட்டுகளின் வகையாயிருந்தன (நடபடிகள் 13:14; 14:1; 17:1, 10; 18:4; 19:8 ஆகிய வசனங்களைக் காணவும்). நான் முழுநேரமும் பிரசங்கிக்கத் தொடங்கியபோது, இதே வகையான கேள்விகளையும் விவாதங்களையும் கேள்விப்பட்டு திகைப்படைந்தேன். நான், "இவற்றிற்குப் பதில்களை அட்டைகளில் நான் அச்சிட்டாக வேண்டும். பின்பு, யாரேனும் ஒருவரால் எதிர்த்து நிற்கப்படும்போது, நான், அவர்களுக்கு ஒரு அட்டையைக் கையளிக்க முடியும். அது எங்கள் இருவருக்குமே ஏராளமான நேரத்தைச்

சேமிப்பதாக இருக்கும்!" என்று எனக்குள்ளாகவே நினைத்தேன். இது என்னுடனான ஒரு தனிப்பட்ட நகைச்சுவைத் துணுக்காக மாத்திரமே இருந்தது - ஆனால் நீங்கள் நீண்ட காலம் போதித்து அல்லது பிரசங்கித்து இருந்தால், நான் எதை அர்த்தப்படுத்துகிறேன் என்று நீங்கள் அறிந்திருப் பீர்கள். ஆண்டுகளினூடாகப் பவுல், ஒரேவிதமான மறுப்புரைகளைத் திரும்பத் திரும்பக் கேள்விப்பட்டிருக்கலாம். அவைகள், அவர் கிறிஸ்தவராவதற்கு முன்பு தாமே ஏற்படுத்தியிருந்த விமர்சனங்களைப் போன்றதாகக்கூட இருந்திருக்கலாம்.

## மறுப்புரை: "பவுலே, நீர் தேவனுடைய உடன்படிக்கையைப் புறக்கணிக்கிறீர்!"[3] (3:1, 2)

*மறுப்புரை (3:1)*

2ம் அதிகாரத்தின் முடிவில், பவுல் மோசேயின் நியாயப்பிரமா ணத்தைக் கொண்டிருத்தலும் விருத்தசேதனம் செய்விக்கப்பட்டிருத்தலும் யூதர்களுக்கு இரட்சிப்பை உறுதிப்படுத்தவில்லை என்று அவர்களுக்குக் கூறியிருந்தார் (2:17-29). தேவபக்தியுள்ள ஒரு நபரிடத்தில் அவரது இரட்சிப்பு கேள்விக்குரியதாக உள்ளது என்று நீங்கள் கூறும் எந்த வேளையிலும், நீங்கள் ஒரு விவாதத்தில் ஈடுபடப்போகிறீர்கள். இவ்விதமாக நாம், பின்வரும் "பதிலுரை" பற்றி வியப்படைவதில்லை: "இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேனத்தினாலே பிரயோஜனம் என்ன?" (3:1).

"மேன்மை" என்ற வார்த்தை, "மேலே" என்பதற்கு முன்னிடைச் சொல் லான *peri* என்பதில் இருந்துவருகிற *perissos* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Perissos* என்பது, "மேலே மற்றும் மீது" உள்ள ஒரு விஷயத்தைக் குறிக்கிறது.[4] "பிரயோஜனம்" என்பது, "வளருதல்" என்று அர்த்தப்படுகிற வேர்வார்த்தையில் இருந்து வருகிறதான, *opheleia* என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[5] *Opheleia* என்பது, ஒருவர் கொண்டுள்ளவை வளருதல் அல்லது கூட்டப்படுதல் என்பதைக் குறிக்கிறது. *Perissos* மற்றும் *Opheleia* என்பவை ஒரே விஷயத்தைக் கூறும் இருவகைகள் என்பதாக மாத்திரமே உள்ளன. பவுலினால் கற்பனைசெய்யப்பட்ட யூத எதிரொளி, "நீர் சொல்வது உண்மையென்றால், யூதராயிருப்பதில் *என்ன கருத்துள்ளது?*" என்று கேட்டார்.

யூதர்களைப் பொறுத்தமட்டில், 2ம் அதிகாரத்தில் பவுலின் வார்த்தைகள், தேவன் அவர்களுடன் நீண்ட காலத்திற்கு முன்பு ஏற்படுத்தி யிருந்த உடன்படிக்கையைப் பிரதிபலித்தன. தேவன் அவர்களை, பூமியின் மற்ற எல்லா மக்களினங்களிலும் இருந்து பிரித்தெடுத்து அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தையும் விருத்தசேதன அடையாளத்தையும் கொடுத்திருந்தார். அது ஒன்றையும் அர்த்தப்படுத்தவில்லை என்று பவுல் கூறினாரா?

*பதிலுரை (3:2)*

*2ம் அதிகாரத்தின் பவுலின் பலத்த வார்த்தைகளுக்குப் பின்பு, அவர் "ஒரு யூதனாக இருப்பதில் மேன்மை எதுவும் இல்லை" என்று பதில் அளிப்பார் என்று நாம் எதிர்பார்த்திருக்கலாம். அதற்குப் பதிலாக அவர், "அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது" என்று பதில் அளித்தார் (3:2). எந்த "மிகுதியான" மேன்மைகளையும் பிரயோஜனங்ளையும் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார்? அவர், "தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது" என்று கூறினார் (வசனம் 2ஆ). இவ்வசனப்பகுதியில்,* [*ஆங்கிலத்தில்* "First of all, that they were entrusted with the oracles of God" *என்றுள்ளது.*]

"First of all" *என்பது, பவுல் ஒரு விரிவான பட்டியலைக் கொடுக்க நோக்கங்கொண்டிருந்தார் என்ற மனப்பதிவை விட்டுச்செல்கிறது - ஆனால் இந்தப் பட்டியில் 9ம் அதிகாரம் வரையிலும் காணப்படுவதில்லை (வசனங்கள் 4, 5ஐக் காணவும்). இங்கு இவ்வார்த்தைகள் அனேகமாக, "விசேஷித்த மேன்மையாமே" என்று அர்த்தப்படுகிற அறிமுகமாக மாத்திரம் உள்ளன.*

*யூதர்களிடத்தில் "தேவனுடைய வாக்கியங்கள் ஒப்புவிக்கப் பட்டிருந்தன" என்பது மிகமுக்கியமான மேன்மையாக இருந்தது. "வாக்கியங்கள்" என்பது logia என்ற வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இது logos ("வார்த்தை") என்பதன் குறைப்பதமாக இருக்க வேண்டும் என்று பல கல்வியாளர்கள் கருதுகின்றனர்.*[6] *"தேவனு டைய வாக்கியங்கள்" என்பதை* AB *வேதாகமம்,* "as (the brief ... utterances) of God" *என்று குறிப்பிடுகிறது. ஒருவேளை இந்த தனிச்சிறந்த வடிவமானது, தேவனுடைய வெளிப்பாட்டின் நெருங்கிய மற்றும் தனிப்பட்ட இயல்பைச் சுட்டிக்காண்பிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.* NIV *வேதாகமத்தில்,* "the very words of God" *என்றுள்ளது. சிலர் logia என்பதை யூத வேதவசனங்களின் ஒரு பகுதிக்கு மாத்திரம் வரையரைப்படுத்துகின்றனர், ஆனால் ஜான் மெக்ஆர்தர் என்பவர், இந்தச் சொற்றொடர் "பழைய ஏற்பாடு முழுவதையும்" குறிக்கிறது என்று முடிவுசெய்தபோது அவர் சரியானவராவே இருந்தார்.*[7]

*ஜேம்ஸ்* R. *எட்வர்ட் என்பவர், "தேவனுடைய வெளிப்படுத்துதல் எல்லா இடங்களிலும் நடைபெறுவதில்லை. மனிதகுலம் தாம் விரும்பும்போது விரும்பும் இடங்களில் தேவனை வேண்டி வற்புறுத்த இயலாது. தேவன் தம்மை, அவரே அறியச்செய்ய வேண்டும்" என்று எழுதினார்.*[8] *இவ்விஷயத்தில், அவர் தம்மையும் தமது சித்தத்தையும் யூதர்களுக்கு அறியச்செய்திருந்தார். அவர்கள் தேவனுடைய கட்டளைகள், தீர்க்கதரிசனங்கள், மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். அவரது கட்டளைகள், எவ்வாறு வாழவேண்டும் என்பதை அவர்களுக்குக் கூறின; அவரது தீர்க்கதரிசனங்கள் மேசியாவை முன்னதாகச் சுட்டிக்காண்பித்தன; அவரது வாக்குத்தத்தங்கள் தொடர்ந்து பாதுகாப்பை அவர்களுக்கு உறுதிப்படுத்தின. யூத மக்களினத்தைத் தேவன், "மற்ற எல்லாப்பொக்கிஷங்களுக்கும்*

அப்பாலுள்ள பொக்கிஷத்தின் காவலனாக" ஏற்படுத்தினார்."[9]

இந்தப் பொக்கிஷத்தை எழுத்தளவில் கொண்டிருந்ததில் ... தேவனே தம்மைத் தெளிவாக வெளிப்படுத்தியதைக் கொண்டிருத்தலில் ... மனித குலத்திடம் தேவன் எதை எதிர்ப்பார்த்தார் என்பது பற்றி துல்லியமான அறிவுறுத்துதல்களைக் கொண்டிருத்தலில் ... மேன்மை எதுவும் இருந்ததா? இருளில் வழியைக் கண்டறிய முயற்சிசெய்யும் இரு மனிதர்களை பற்றிக் கற்பனை செய்துபாருங்கள். ஒருவர் மிகவும் மங்கலான, அணையத்துடிக்கும் சுவாலை கொண்ட விளக்கு ஒன்றைக்கொண்டுள்ளார், இன்னொருவரோ தமது பாதைவழிக்கு ஒளியூட்டும் பலமான, வல்லமை நிறைந்த விளக்கு ஒன்றைக் கொண்டுள்ளார்.[10] முதலாமவர், கிறிஸ்து வருவதற்கு முன்பிருந்த புறஜதியாருடன் ஒப்பிடப்படக் கூடியவராக இருக்கிறார்; இரண்டா மவர் யூதராக இருக்கிறார். யாருக்கு மேன்மை உள்ளது? பிரகாசமான விளக்கைக் கொண்டுள்ளவருக்கே என்பது தெளிவு. அவரே, "தேவனு டைய வார்த்தைகளை" கொண்டிருந்த யூதராவார்.

இருப்பினும், மேன்மையைக் கொண்டிருத்தல் என்பது மாத்திரம் வெற்றிக்கு உத்திரவாதம் அளிப்பதில்லை. நல்ல கல்வியை உடைய ஒரு நபர், கல்வியே கற்காத தனிநபரைக் காட்டிலும் மேன்மையை கொண்டிருக்க வேண்டும். இருந்தபோதிலும், சிறிதளவே கல்விகற்ற அல்லது முறையான கல்வியே கற்காதவர், கணிசமான அளவு கல்வியறிவு கொண்டவர்களைக் காட்டிலும் அதிகமாகச் சாதிக்கிறார் - இது அவர்கள் கடினமுயற்சி செய்வதால் கிடைக்கிறது. விளையாட்டுக்களை விளையாடுவதில், பலம் வாய்ந்த உடல் மற்றும் இயற்கையான விளையாட்டுத்திறன் ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள ஒரு நபர், குறைவான திறன் கொண்டவரைக் காட்டிலும் மேன்மையானவராக இருக்கிறார் - ஆனால் சிலவேளைகளில் இந்த இரண்டாம் நபர் தமது மாபெரும் தீர்மானத்தினால் முதலாம் நபரைத் தோற்கடித்துவிடுகிறார். அதுபோலவே, "தேவனுடைய வார்த்தைகளை" கொண்டிருத்தல் என்பது யூதர்களுக்குப் புறஜாதியாரைக் காட்டிலும் ஏராளமான மேன்மையை அளித்திருந்தது - ஆனால் யூதர்கள், தங்களுக்குத் தேவன் கொடுத்திருந்தவற்றில் இருந்து அதிகமானவற்றை ஏற்படுத்தத் தவறியிருந்தனர்.

யூதர்கள், தாங்கள் "தேவனுடைய வார்த்தைகள் ஒப்புவிக்கப் பட்டவர்களாக" இருந்ததைப் புரிந்துக்*கொள்ளத் தவறியிருந்தனர்* என்பது தெளிவு. "ஒப்புவிக்கப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையின் வேராக இருப்பது, "நம்புதல்" என்பதற்கான வழக்கமான வார்த்தையான *pisteuo* என்ற வார்த்தையே ஆகும். (விரைவில் நாம் இதற்குத் திரும்புவோம்.) இவ்வார்த்தை ஒரு செயல்துடிப்பு அற்ற உணர்வில் பயன்படுத்தப்படும்போது, "நம்பிக்கை வைக்கப்பட்டிருத்தல்" என்று அர்த்தப்படுத்தப்படுகிறது.[11] "ஒப்புவிக்கப்பட்டது" என்ற சொற்றொடர், "உரிமைத்துவம் என்பதில் இருந்து உக்கிராணத்துவம் என்பதற்கும், உடைமைகொண்டிருத்தல் என்பதில் இருந்து அதற்குப் பொறுப்புவாய்ந்தவராயிருத்தல் என்பதற்கும் வலியுறுத்தத்தை மாற்றுகிறது."[12] யூதர்கள், வசனத்திற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்கவில்லை. ஒருகருத்தில், அவர்கள்

*உண்மையில் அதைத் தவறாக இடப்படுத்தியிருந்தனர் (2 நாளாகமம் 34:14-33ஐக் காணவும்). கிறிஸ்துவின் காலத்தின் போது அவர்கள், தேவனால் கொடுக்கப்பட்ட கட்டளைகளைக் காட்டிலும் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதினர் (மத்தேயு 15:1-9ஐக் காணவும்). யூதத்தலைவர்களின் ஒரு குழுவினிடத்தில் இயேசு, "நீங்கள் வேதவாக்கியங்களை அறியாதிருக்கிறீர்கள்" என்று நேர்முகமாக கூறினார் (மாற்கு 12:24).*

## *மறுப்புரை: "பவுலே, நீர் தேவனுடைய உண்மைத்தன்மை பற்றிக் கேள்வியெழுப்புகிறீர்!" (3:3, 4)*

*மறுப்புரை (3:3)*

*யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறியிருந்தனர் என்ற உண்மை, நம்மைப் பின்வரும் இரண்டாவது மறுப்புரைக்கும் கொண்டுவருகிறது: "சிலர் விசுவாசியாமற்போனாலுமென்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ"[13] (வசனம் 3).[14]*

*2 மற்றும் 3ம் வசனங்களில் பவுலின், வார்த்தைகளின்மீதான விளையாட்டு, ஆங்கிலத்தைப் பார்க்கிலும் கிரேக்க மொழியில் அதிகம் தெளிவாக உள்ளது: "விசுவாசம்" மற்றும் "நம்பிக்கை" என்பதற்கான வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் வருதல் (pisteuo மற்றும் pistis). யூதர்களிடத்தில் வேத வாக்கியங்கள் "ஒப்புவிக்கப்பட்டிருந்தன" (pisteuo என்பதன் ஒரு வடிவம்), ஆனால் அவர்கள் வேத வாக்கியங்களை "விசுவாசிக்க" (pisteuo என்பதன் ஒரு வடிவம்) தவறியிருந்தனர். அவர்களின் "அவிசுவாசம்" (pistis என்பதன் எதிர்மறை) தேவனுடைய "உண்மைத்தன்மையை"[15] (pistis என்பதன் எதிர்மறை) ஒன்றுமற்ற தாக்கிற்றா? வார்த்தைகளின்மீதான இந்த விளையாட்டை நாம் பின்வருவது போன்று விளக்கப்படுத்தலாம்: "யூதர்கள் அவரது வார்த்தைகளுக்கு* உண்மையுள்ளவர்களாய் *இருக்கும்படி எதிர்ப்பார்க்கப்பட்டனர், ஆனால் அவர்கள்* உண்மையற்றவர்கள் *ஆகியிருந்தனர். அவர்களின் உண்மையற்றதன்மை தேவனுடைய* உண்மைத்தன்மையை *ஒன்றுமற்ற தாக்கிற்றா?"*

*LP வேதாகமம் இந்த மறுப்புரையைப் பின்வருமாறு பொழிப்புரை செய்கிறது: "அவர்களில் [யூதர்களில்] சிலர் விசுவாசமின்றி இருந்தனர் என்பது உண்மையே, ஆனால் அவர்கள் தேவனுடனான தங்களின் உடன்படிக்கையை முறித்துப்போட்டனர் என்பதால் மாத்திரம், தேவன் [அவர்களுடனான] தமது உடன்படிக்கையை முறித்துப் போடுவார் என்று அர்த்தப்படுகிறதா?" கற்பனையான எதிராளி செயல்விளைவில், "தேவன் தமது மக்களுடன் நீண்ட காலத்திற்கு முன்பு ஏற்படுத்திய உடன்படிக்கை குறித்து அவர் உண்மையற்றவரானார் என்று நீங்கள்*

*குற்றம் சாட்டுகிறீர்களா?" என்று கேட்டார்.*

***பதிலுரை (3:4)***

*இந்தக் கேள்விபற்றிப் பவுல், 9 முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில் விரிவாகக் கலந்துரையாடினார். இந்தக்கணத்திற்கு அவர், தேவன் உண்மையற்றவராக இருக்கச் சாத்தியக்கூறு இருந்தது என்ற மறைமுக மான கூற்றிற்குப் பதிலுரைத்தார். அவரது பதிலுரை வலுவார்ந்ததாக உள்ளது: "அப்படியாக்கமாட்டாது!" (3:4அ). "அப்படியாக்கமாட்டாது!" என்பது, "கிரேக்க மொழியில் சாத்தியமான மிகப்பலத்த எதிர்மறை"யான me genoito என்பதன் நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது.[16] பவுல் இவ்வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினார் (3:6, 31; 6:2, 15; 7:7, 13; 9:14; 11:1, 11), இது இந்த நிருபத்தில் நிறைந்துள்ள அணலைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*Me genoito* என்ற சொற்றொடரில் உள்ள உணர்வின் ஆழத்தை ஆங்கில வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாது. NIV வேதாகமத்தில் "Not at all!" என்றுள்ளது. NKJV வேதாகமத்தில் "நிச்சயமாக இல்லை!" என்றுள்ளது. KJV வேதாகமம், "அரைத்தீட்டான சொல்விளக்கம்" என்று அழைக்கப்பட்டுள்ள பின்வரும் சொற்றொடரைக் கொண்டு உணர்வுநிலையின் உச்சபட்சத்தை விளக்கியுரைக்க முயற்சி செய்கிறது: "தேவன் தடைசெய்கிறார்."[17] CJB வேதாகமம் இதேபோன்ற ஒரு அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது: "பரலோகம் தடைசெய்கிறது!" நான் அறிந்துள்ள மக்கள், "இல்லை, ஆயிரம் தரம் இல்லை!" என்று கூறுவார்கள்.[18] பவுல், தேவன் உண்மை யற்றவராக இருப்பார் என்ற கருத்தினாலேயே கூட அதிர்ச்சியடைந்தார். இந்த அப்போஸ்தலர், மக்கள் தேவனை மகிமைப்படுத்தத் தவறுவார்கள் என்பது பற்றி, அவர்கள் தம்மை *நம்பமாட்டார்கள்* என்பதைவிட அதிக அக்கறையுள்ளவராயிருந்தார்.

*பவுல் தமது பதிலுரையைத் தொடர்ந்தார்: "தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக" (வசனம் 4இ). கற்பனையான எதிராளி செயல்விளைவில், யூதர்களுடைய விசுவாசமின்மை தேவனுடைய உண்மைத்தன்மையைப் பாதித்ததா? என்று கேட்டிருந்தார். மக்கள் தாங்கள் இருக்கவேண்டிய பிரகாரம் இருப்பதில்லை என்றாலும்கூட, அது தேவனுடைய மாறாத இயல்பைப் பாதிப்பதில்லை என்று பதில் அளித்தார் (2 தீமோத்தேயு 2:13ஐக் காணவும்). எடுத்துக்காட்டாக, இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு தனிநபரும் தவறானவராக இருப்பினும், தேவன் அப்பொழுதும் உண்மையுள்ளவராக இருப்பார்* (Goodspeed).

*தேவன் எப்போதும் உண்மையுள்ளவராக இருப்பார் என்ற சத்தி யத்தை மறுவலிவூட்டுவதற்கு பவுல், சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார்: "நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று" (வசனம் 4ஆ). இந்த மேற் கோள், சங்கீதம் 51:4ன் பிற்பகுதியில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.*

இவ்விடத்தில் இவ்வசனத்தைப் பவுல் தரவழைத்துள்ள விதமானது, பழைய ஏற்பாட்டின் பெரும்பான்மையான பதிப்புகளின் மொழிபெயர்ப்பில் இருந்து வேறுபட்டுள்ளது. அவர் கிரேக்க பழைய ஏற்பாட்டில் இருந்து (செப்துவஜிந்த்) மேற்கோள் காண்பித்தார், நமது மொழிபெயர்ப்புகளோ எபிரெய மொழியில் இருந்து வந்துள்ளவையாகும்.

சங்கீதம் 51, பழைய ஏற்பாட்டின் மிகவும் ஆழ்ந்தறிவுள்ள அறிக்கை வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. இது தாவீது பத்சேபாளுடன் பாவத்திற்கு உட்பட்ட பின்பு, அவர் நாத்தான் தீர்க்கதரிசியை எதிர்கொண்டதைத் தொடர்ந்து, தாவீது மனந்திரும்பியது பற்றிப் பதிவுசெய்கிறது.[19] வசனம் 4ல் தாவீதின் வார்த்தைகள், முடிவில் தேவன் நீதியுள்ளவராக சரியானவராகக் காணப்படுவார் என்பதே தாவீதின் முதன்மையான அக்கறைகளில் ஒன்றாக இருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. செயல்விளைவில், அவர் கர்த்தரிடத்தில், “நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும், நான் எனது பாவத்தை அறிக்கையிடுகிறேன்” என்று கர்த்தரிடத்தில் கூறினார்.

“உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும்” என்ற கடைசிச் சொற்றொடர் சிலருக்கு வினோதமாகக் காணப்படலாம். மக்கள் எப்போதாவது தேவனை நியாயம் விசாரிக்கின்றனரா? ஆம், அவர்கள் - அன்றாடம் - அதைச் செய்கின்றனர். “தேவன் ஏன் இது நடக்கும்படி அனுமதித்தார்?” என்று தங்களை தலைகளைக் குலுக்கி கேட்கிற மக்களை நான் அறிந்துள்ளேன். மிகவும் உணர்வுள்ள கிறிஸ்வர்களின் சிந்தைகளில்கூட சந்தேகம் ஊடுருவக்கூடும். மோசஸ் E. லார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> நம்மைப் பாவம் செய்யக்கூடியவர்களாகப் படைத்தமைக்காக; நம்மை சோதனைகளுக்கு உட்படக்கூடியவர்களாக; இன்னொருவரின் பாவத்தினிமித்தம் நம்மை மரணத்திற்கு உட்படுத்தியதற்காக; கடினமான வாழ்வை நமக்கு நியமித்தமைக்காக; மாபெரும் சோதனைகளின் நடுவில் நாம் பரிசுத்தமாய் விளங்கவேண்டும் என்று கேட்பதற்காக; எதிர்காலத்தைப் பற்றி இன்னும் அதிகமானவற்றை வெளிப்படுத்தாது இருப்பதற்காக, நாம் அவர்மீது பழிசுமத்துகிறோம். ...[20]

மனிதர்கள் தேவனை நியாயந்தீர்க்க முயற்சிசெய்தாலும்கூட, அவர் நிறைவாக உண்மையுள்ளவராகவே இருப்பார் என்பது பவுலின் கருத்தாக இருந்தது. ஒருநாளில் சகலமக்களும், எல்லாவிஷயங்களிலும் அவர் நியாமானவராக இருந்தார், அவர் உண்மையுள்ளவராக இருந்தார் என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். CJB வேதாகமம், தேவன் “சோதனைக்கு உள்ளாக்கப்படும்”போது, அவர் “தீர்ப்பை வெற்றிகொள்வார்” என்று கூறுகிறது.

## *மறுப்புரை: "பவுலே, நீர் தேவனுடைய நீதியைக் குறைத்து மதிப்பிடுகிறீர்!" (3:5, 6)*

*மறுப்புரை (3:5அ-இ)*

*மூன்றாவது மறுப்புரை, "நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால்*[21] *என்ன சொல்லுவோம்?" என்று தொடங்குகிறது (வசனம் 5). "ஆல்" என்பது "படியால்" என்று அர்த்தம் கொண்டுள்ளது. 5ம் வசனத்தின் முதல் பகுதி பின்வருமாறு மொழிபெயர்க்கப்படக்கூடும்: "நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணுகிறபடியால் என்ன சொல்லுவாம். ..."*

*தேவன் நியாயமான(நீதியுள்ள)வராக இருப்பதாகக் காண்பிக்கப்பட்டார் என்பது தாவீதின் பாவத்தி(அநீதியி)னுடைய விளைவுகளில் ஒன்றாக இருந்தது (வசனம் 4). கற்பனையான எதிராளி இவ்விதமாக, தனது அடுத்த மறுப்புரையைப் பின்வரும் முதற்கூற்றுடன் தொடங்கினார்: யூதர்களின் விசுவாசமின்மையானது தேவனுடைய உண்மைத்தன்மையினின்று அவரை விலக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக தேவனுடைய உண்மைத்தன்மையைப் பெரிதாக்கிற்று. இது முதலாவதாக நேரெதிரான ஒப்பீட்டில் - ஒரு அழுக்கான உடைகூட உண்மையில் ஒரு துவைக்கப்பட்ட புதிய துணி எவ்வாறு இருக்கும் என்பதைக் காண்பிக்குமோ, அதேபோன்று - இதைச் செய்தது. இரண்டாவதாக, இது தேவன், யூதர்களின் குறைவுகள் எவ்வளவு இருந்தாலும், அவர்களுடனான தமது உடன்படிக்கையை தேவன் தொடர்ந்து கனப்படுத்துகையில், தமது இரக்கத்தைச் செயல்விளக்கப்படுத்த ஏராளமான வாய்ப்புகளை அளிப்பதினால் இதைச் செய்தது. விவாதம் பின்வருமாறு சொற்கோவைப்படுத்தப்படலாம்: "நமது பாவங்கள் தேவனை நல்லவராகக் காணச்செய்கின்றன" (இது* SEB *வேதாகமத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது).*

*யூதர்களின் அநீதி தேவனுடைய நீதியை உயர்த்திற்று என்று யூகித்த நிலையில், எதிராளி தொடர்ந்தார்: "*[நாம்]*் என்ன சொல்லுவோம்?" (வசனம் 5ஆ) அல்லது "நாம் என்ன முடிவை அடைய வேண்டும்?" "கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதர் என்று சொல்லலாமா?" ஆங்கிலத்தில் இவ்விடத்தில்* "The God who inflicts wrath is not unrighteous, is He?"[22] *என்றுள்ளது (வசனம் 5இ). அந்தச் சிந்தனையை விரிவாக்க என்னை அனுமதியுங்கள்: "பவுலே, நீர் தேவனுடைய கோபத்தைப் பற்றிப் பேசினீர்* [*1:18; 2:5, 8ஐக் காணவும்*]; *ஆனால் தேவன்* [*புறஜாதியாருக்குச் செய்வதுபோலவே*] *யூதர்களாகிய நம்மீதும் கோபத்தைச் செலுத்துவார் என்றால், அவர் நமக்குக்கொடுத்துள்ள வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்ளத் தவறுவாரல்லவா? அது அவரை அநீதியுள்ளவராக்கும் - மற்றும் அவர் நிச்சயமாகவே அநீதியுள்ளவரல்ல. நம்மைத் தண்டித்தல் என்பது தேவனுக்கு நீதியானதாயிராது!" யூதர்கள், தாங்கள் எவ்வளவுதான் பாவிகளாயிருந்தாலும், தாங்கள் இன்னமும் தேவனின் உடன்படிக்கைக்குரிய மக்களினம் என்ற கருத்தை விடாப்பிடியாய்ப்*

பற்றிக்கொண்டிருந்தனர். அவ்விதமாக அவர்கள், தாங்கள் எவ்வளவு துன்மார்க்கமாக நடந்துகொண்டிருந்தாலும் தேவன் தங்களை கடைசியில் இரட்சிப்பார் என்று நம்பியிருந்தனர்.

*பதிலுரை (3:5ஈ, 6)*

பவுல் யூதர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் உண்மையிலேயே இந்த மறுப்புரையை அனேகமாக எதிர்கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் இது இன்னமும் இதைப் பற்றிக் குரல்கொடுக்க அவரைச் சங்கடப்படுத்தியது. அவர் தமது பதிலை ஒரு மன்னிப்புக்கோரும் விளக்கத்துடன் தொடங்கினார்: "(நான் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன்)" (3:5இ). இது, "மனிதர்கள் தங்கள் பாவத்தை நியாயப்படுத்த முயற்சிக்கும்போது எவ்வளவு மதியீனர்களாக முடியும் என்று நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறுவதாக உள்ளது. பின்பு, அவர் தேவன் அநீதராயிருக்க முடியும் என்ற மறைமுகமான கூற்றிற்குப் பின்வரும் உக்கிரமான சொற்றொடர்களைக் கொண்டு பதில்செயல் புரிந்தார்: "அப்படிச்சொல்லக் கூடாது!" (வசனம் 6அ).

இதை அவர் ஒரு செறிவான விவாதத்தைக் கொண்டு தொடர்ந்தார்: "சொல்லக்கூடுமானால், தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பதெப்படி?" (வசனம் 6ஆ). இவ்வார்த்தைகள் (1) தெளிவான அர்த்தம் ஒன்றையும் (2) அவ்வளவு தெளிவற்ற அர்த்தம் ஒன்றையும் கொண்டுள்ளன. மேம் போக்காகப் பவுல், "தேவன் அநீதராயிருந்தால், அவர் உலகத்தை நியாயந்தீர்க்கத் தகுதியற்றவராகிறார். அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறபடியால்,[23] அவர் நீதியுள்ளவரயிருக்கிறார் என்றும் நீங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும்."

இருப்பினும், பவுல் அதைக்காட்டிலும் அதிகமானவற்றைக் கூறினார். அவர், யூதருடைய அநீதியானது தேவனுடைய நீதியை உயர்த்திற்று, மற்றும் தேவனை "நல்லவராகக் காணச்செய்த" விஷயமானது, அவர் யூதர்களைத் தண்டிப்பதை நியாயமற்றதாக்கும் என்ற விவாதத்திற்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார். செயல்விளைவில், பவுல் "உங்கள் விவாதத்தை நாம் பொதுவாக உலகத்திற்கு நடைமுறைப்படுத்துவோமாக. புறஜாதியார் உங்களைக் காட்டிலும் அதிகம் அநீதர் என்று நீங்கள் நம்புகிறீர்கள்.[24] அநீதம் என்பது தேவனுடைய நீதியை உயர்த்துமென்றால், புறஜாதியாருடைய அநீதமானது உங்கள் அநீதத்தைக்காட்டிலும் அதிகமாய்த் தேவனுடைய நீதியை உயர்த்த வேண்டும். பின்பு புறஜாதியாரை நியாயந்தீர்த்தல் என்பது தேவனுக்கு இருமடங்கு நியாயமற்றதாக இருக்கும். உங்கள் விவாதத்தின்படி, தேவன் எவரொருவரையும் நியாயந்தீர்க்க இயலாது. நீங்கள் அவரை இந்த உலகத்தின் நியாயாதிபதியாக இருப்பதற்குத் தகுதி யற்றவராக்கிவிட்டீர்கள்!"

பவுலின் பதிலுரையை ஆழ்ந்து கவனித்தபின்பு, நாம், யூத மறுப் புரையைக் கண்ணோக்கி, "அதுஒரு மதியீனமான விவாதமாகும்! யாராவது இவ்வளவு மதியீனராயிருக்க முடியுமா?" என்று கேட்கும்படி சோதிக்கப்படுகிறோம். வாழ்வில் பல விஷயங்களை நீங்கள் எண்ண

*முடியாது, ஆனால் பின்வருவதுபற்றி நீங்கள் எண்ண முடியும்: மக்கள் தவறு செய்கிறபோது, அவர்கள் மதியீனமான விளக்கங்களைக் கொண்டு தங்களைத்தாங்களே நியாயப்படுத்த முயற்சி செய்வார்கள்.[25] கர்த்தரிடத்தில் ஆதாம், "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்" என்று கூறினார் (ஆதியாகமம 3:12). ஒரு சிறுபிள்ளை ஒரு பாத்திரத்தை உடைத்துவிட்டு, நாயைச் சுட்டிக்காண்பித்து, "அதுதான் உதைத்தது" என்று கூறுகிறது. நவநாகரீக பழக்கத்தை விரும்பும் ஒரு இளைஞன்/இளம்பெண், தனது பெற்றோர்களிடத்தில், "எல்லாரும் அதைச் செய்கிறார்களே!" என்று கூறுகிறான்/கூறுகிறாள். திருமணத்திற்குப் புறம்பான தனது உறவு வழக்கத்தை நியாயப்படுத்த விரும்பும் திருமணமான மனிதர், "எனது மனைவி என்னை புரிந்துகொள்வதில்லை!" என்று கவலையுடன் கூறுகிறார். யாரோ ஒருவர் கூறியபடி, மனந்திரும்புதலைக் காட்டிலும் விளக்கம்கொடுத்து நியாயப்படுத்துதல் சுலபமாக உள்ளது.[26] நீலியோன் மோரீஸ் என்பவர், "பாவிகளாகிய நாம் நம்மையே நியாயப்படுத்த முயற்சிசெய்கையில், நம்புதற்கரிதான உண்மைத்தன்மையைக் காட்சிப்படுத்துகிறோம்" என்று எழுதினார்.[27]*

## *மறுப்புரை: "பவுலே, நீர் தேவனுடைய மகிமை பற்றிக் குழப்பம் கொண்டிருக்கிறீர்" (3:7, 8)*

*மறுப்புரை (3:7)*

*அது நம்மை நான்காவது மறுப்புரைக்குக்கொண்டுவருகிறது - இருக்கலாம். 7ம் வசனத்தில், பவுல், "அன்றியும், என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்?" என்று கூறினார்.*

*சிலர், 7ம் வசனத்தில், பவுல் "என் பொய்" என்பது பற்றிப் பேசி "நான்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதைக் கவனித்துள்ளனர். அவர்கள், பவுல் மூன்று மறுப்புரைகளை மாத்திரமே அறிமுகப்படுத்தினார் என்றும், 7ம் வசனத்தில் தனது எதிராளியின் வாதத்தைத் தமக்கே நடைமுறைப்படுத்தினார் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்கள் இவ்வசனத்தில் பவுல் பின்வருமாறு கூறினார் என்பதுபோன்று விளக்கம் தருகின்றனர்: "உங்கள் பாவங்கள் தேவனுடைய மகிமையை உயர்த்திற்று எனவே அவர் உங்களை நியாயந்தீர்க்கக் கூடாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், அதேவேளையில், நீங்கள் என்னைப் பொய்யன் என்று கூறுகிறீர்கள். உங்கள் தர்க்கம் சரியானதாக இருந்ததென்றால், எனது 'பொய்'கூட தேவனுடைய மகிமையை உயர்த்துமே. விஷயம் அதுவாக இருந்தால், என்னைப் பாவியென்று நீங்கள் கண்டனம் பண்ணுதல் சீர்பொருத்தமற்றது!"*

*இந்த விளக்கவுரை நிச்சயமாகவே சாத்தியமானதாக உள்ளது, இது வசனத்திற்கு அநீதியெதுவும் செய்வதில்லை. இருப்பினும், "பொய்" என்ற*

*வார்த்தையைக் குறித்து, பவுலின் கற்பனையான எதிராளி, 4ம் வசனத்தில் பவுல் எந்த ஒருமனிதனும் (சந்தர்ப்பப்பொருளில் யூதன்) பொய்யன் என்று குற்றம் சாட்டுவதைக் குறிப்பிட்டார் என்று எனக்குக் காணப்படுகிறது. இவ்விடத்தில் பவுல் தன்மைச் சொல்லைப் பயன்படுத்துதல் பற்றி, அவர் தமது வாசகர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு அடிக்கடி அவ்வாறு செய்தார்.[28] பவுல், தற்போது தாம் எழுப்பியிருந்த மறுப்புரைக்கு ஒத்ததான நான்காவது மறுப்புரையொன்றை 7ம் வசனத்தில் எழுப்பினார் என்று நான் நினைக்கிறேன்* (NIV; AB; CEV; NLT *ஆகிய வேதாகமங்களைக் காணவும்). யூதத்துவ எதிராளியானவர் அனேகமாக, "நீர் பொய்யுரைத்தல் என்பது தேவனுடைய உண்மைத்தன்மையை உயர்த்துகிறது மற்றும் நிறைவாக அவரது மகிமையை உயர்த்துகிறது என்றால் [பவுலாகிய] நீர், யூதர்களாகிய நாங்கள் பாவிகளாயிருக்கிறோம் என்று விடாப்பிடியாகக் கூறுவது ஏன்?" என்று விவாதித்திருக்கலாம்.*

*பதிலுரை (3:8)*

*வசனங்கள் 5 மற்றும் 7ல் விவரிக்கப்பட்டுள்ள வகையிலான தர்க்கம் அதன் தர்க்கரீதியான முடிவிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால், பாவம் செய்வது நல்லது, ஏனென்றால், முடிவில் "பாவம் தேவனை நல்லவராகக் காட்சியளிக்க வைக்கிறது" என்று ஒருவர் முடிவுசெய்வார். 8ம் வசனத்தில் பவுல் இதைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்: "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா?" இவ்வாறு விளக்கியுரைக்கப்பட்ட தர்க்கம் எவரொருவரையும் விலகி ஓடச்செய்வதாக இருக்கும். தீமை/பொல்லாங்கு என்பது ஒருக்காலும் நல்லதாக இருப்பதில்லை, மற்றும் பாவம் என்பது ஒருக்காலும் பாராட்டப்படுவதாக இருக்கக்கூடாது.*

*"நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக" என்று எவரேனும் உண்மையிலேயே விவாதம் செய்வார்களா? மக்கள் எல்லாக் காலங்களிலும் இதைச் செய்கின்றனர்! அவர்கள் துல்லியமாக அதே வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை, ஆனால் அது அடிப்படையாக உள்ள தத்தவமாக இருக்கிறது.[29] நான் இவ்வார்த்தைகளை எழுதிக்கொண்டிருக்கையில், ஆக்லஹாமாவின் ஆளுநர், "நமது பள்ளிகளுக்கு நிதிகளை உயர்த்து வதற்காக" மாநிலத்தில் வளர்ந்து வரும் சட்டப்பூர்வமான சூதாட்டத்தை அங்கீகரிக்குமாறு குடிமக்களை வேண்டிக்கொண்டிருக்கிறார். அவரது உரைகளை நான் கவனிக்கையில், 8ம் வசனத்தின் வார்த்தைகள் எனது மனதில் எதிரொலிக்கின்றன: "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக."*

*"நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக" என்பது மிகப்பழைய தத்துவம் ஒன்றின் விளக்கமாக உள்ளது: "முடிவு என்பது வழிமுறைகளை நியாயப்படுத்துகிறது." முடிவு விளைவு நல்லதாக இருக்கும் வரையில், ஒரு இலக்கை அடையச் செய்யப்படுவது என்ன என்பது முக்கியத்துவம் அற்றதாக உள்ளதென்று பலர் நம்புகின்றனர். ஒரு இளைஞன், பரீட்சையில் ஏமாற்றுவதை நியாயப்படுத்துவதற்கு முயற்சிசெய்கிறான், ஏனென்றால், "வழிமுறைகள்" (நேர்மையற்ற தன்மை) நல்லதல்ல*

*என்றாலும், "முடிவு" (பட்டம்பெறுதல்) விரும்பத்தக்கதாக உள்ளது. ஒரு வேலைக்காரர் பிறர்மீது பொய் குற்றம்சாட்டுவதன் மூலமாகத் தனது தவறுக்கான குற்றத்தைப் பிறர்மீது மாற்ற முயற்சிக்கலாம், "வழிமுறைகள்" (பொய்கூறுதல்) தவறானதாக இருப்பினும், "முடிவு" (தனது வேலையைத் தக்கவைத்துக்கொள்ளுதல்) அவருக்கு முக்கியமானதாக உள்ளது. தேவபக்தியற்ற இந்தத் தத்துவத்தின்மூலம் எத்தனை தீமையான செயல்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைத் தேவனே அறிவார்.*

*8ம் வசனத்தின் முதல் பாதியில், பவுல் அடைப்புக்குறிகளுக்குள் ஒரு சொற்றொடரைச் செருகினார்: "(நாங்கள் அப்படிப் போதிக்கிறவர் களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே)" (வசனம் 8ஆ). "நாங்கள்" என்பது அனேகமாக பவுலை மாத்திரமே குறிக்கிற ஒரு "தலையங்க நாங்கள்" என்பதாக இருக்கலாம். அவர் தமது விரோதிகள் தம்மையும் தமது போதனையையும் தூஷிப்பதைப் பற்றிப் பேசினார். அவர் "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக" என்று போதித்தார் என்பதாக அவர்கள் உரிமைகோரினார் என்பது தெளிவு. கிருபை பற்றிய பவுலின் போதனை இங்கு குறிப்பிடப்பட்டிருக்கலாம். 5:20ல் அவர், "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" என்று கூறினார். பவுலின் விமர்சகர்கள் இதை, "நாம் எவ்வளவு அதிகமாய்ப்பாவம் செய்கிறோமோ, அவ்வளவு அதிகமாய்க் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம் - எனவே நம்மால் முடிந்த அளவுக்கு அதிகமாய்ப் பாவம் செய்யவேண்டும்!" என்று போதிக்கப் பிறழ்வுசெய்தனர் (2 பேதுரு 3:16ஐக் காணவும்). 6:1, 2ல், பவுல் தூஷணமான தவறான குறிப்பைப் பற்றி எடுத்துரைத்தார்.*

*"நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக" என்ற தத்துவம் மறுப் புரைக்கத் தகுதியானதென்று பவுல் நினைக்கவில்லை. அதற்குப்பதிலாக, அவர் பின்வரும் சுருக்கமான ஆனால் வலிவுநிறைந்த கூற்றைக்கொண்டு இவ்வசனத்தை முடித்தார்: "அப்படிப் போதிக்கிறவர்கள்மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும்" (3:8ஈ). மூலவசனத்தில், இது "அவர்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாக உள்ளது.[30] "அப்படிப்போதிக்கிறவர்கள்" என்பது, "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக" என்ற கூற்றைக் கூறியவர்களையா அல்லது பவுலைப் பற்றித் தவறான தகவலைப் பரப்புபவர்களையா, யாரைக் குறிக்கிறது என்பது தெளிவற்றதாக உள்ளது (மொழிபெயர்ப்புகளை ஒப்பிடவும்). பவுல் இவற்றில் எதைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாலும், "நீதி" என்பதன்மீதே வலியுறுத்தம் இருந்தது. யூதர்கள், தாங்கள் விரும்பிய யாவற்றையும் விவாதித்திருக்கக் கூடும் - ஆனால் முடிவில், அவர்கள் இன்னமும் பாவிகளாகவே இருந்தனர். எனவே அவர்மீது தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு நியாயமற்றதாக இருக்கவில்லை; அது நீதியானதாக இருந்தது.*

## முடிவுரை

நமது வேதவசனப்பகுதி குறுகியதாக உள்ளது, ஆனால் இதில் நமது இருதயங்களுடன் பேசக்கூடிய கூற்றுக்கள் பொதியப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, 4ம் வசனத்தில் பவுலின் வார்த்தைகள் - "தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக" என்பவை - "கிறிஸ்தவத் தத்துவம் எல்லாவற்றினுடைய முதன்மை அச்சாக உள்ளது" என்று ஜான் கேல்வின் என்பவர் நம்பினார்.[31] ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவர், இந்தக்கூற்றில் "எல்லாரும் பொய்யராக இருக்கிறோம் என்ற தண்டிக்கும் உண்மையும், தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்ற விடுதலையாக்கும் சத்தியமும் அடங்கியுள்ளன'' என்று எழுதினார்.[32] மனிதர்கள் தவறானவர்களாய் இருக்கும்போதுகூட தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். மனிதர்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருக்கும்போதுகூட தேவன் நம்புதற்குரியவராக இருக்கிறார். மனிதர்களை நம்ப இயலாமற்போகும்போதுகூட தேவன்மீது நம்பிக்கை வைக்க முடியும். மனிதர்கள் உங்களை வீழ்ச்சியடையச் செய்தாலும்கூட தேவன் உங்களை ஒருக்காலும் வீழ்ச்சியடையும்படி விட்டுவிடுவதில்லை.

நமது வேதவசனப்பகுதியில் இருந்து மற்ற வலிவார்ந்த சத்தியங்கள் இழுக்கப்பட முடியும், ஆனால் நாம் முடிக்கும் இவ்வேளையில், நான் ஒரே ஒரு உண்மையின்மீது கவனம் குவிக்க விரும்புகிறேன்: யூதர்கள் எழுப்பியிருக்கக்கூடிய ஒவ்வொரு மறுப்புரைக்கும் பவுல் பதிலளித்தார். நீதிமன்ற அறைகளில், வாதியின் வழக்கறிஞர்கள் சிலவேளைகளில், "நான் மறுக்கிறேன்!'' என்ற கூற்றுடன் வாதங்களில் இடையிட்டு பின்பு மறுப்பிற்கான தங்களுடைய காரணங்களைக் கொடுப்பதுண்டு.[33] மறுப்புரை சட்டப்பூர்வமானது என்று நீதிபதி நினைத்தால், அவர் "மறுப்பு நிலைநிறுத்தப்பட்டது" என்று கூறுகிறார். இல்லையென்றால் அவர், "மறுப்பு நீக்கப்பட்டது!" என்று கூறுகிறார். யூதர்கள் எவ்வளவு விவாதங்களை ஏற்படுத்தியிருப்பினும், அவர்கள் இன்னமும், இரட்சிப்பு தேவைப்பட்ட பாவிகளாகவே இருந்தனர்!

நம்பிக்கையுள்ள கீழ்ப்படிதலில் நீங்கள் தேவனுடைய அன்புக்குப் பதில் செயல் செய்திராதிருந்தால் (யோவான் 14:15; மாற்கு 16:16; ரோமர் 6:3-6), உங்களிடம் நான் எளிமையாய்/தெளிவாய் பேச என்னை அனுமதியுங்கள்: நீங்கள் உங்கள் விருப்பத்தின்படியெல்லாம் விவாதம் செய்யலாம், ஆனால் நீங்கள் இழந்துபோகப்பட்டிருக்கிறீர்கள் என்ற உண்மையை மாற்றக்கூடிய எதையும் உங்களால் கூற இயலாது. அது உங்களின் ஆவிக்குரிய நிலையாக இருக்குமென்றால், உங்கள் விவாதங்களைக் கைவிட்டு உங்களைத் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி நான் உங்களிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்!

---

குறிப்புகள்

[1]அடுத்த பகுதியான 3:9-20, அதிகம் பொதுவான இயல்புடையதாக உள்ளது (வசனங்கள் 9ஆ, 19ஆ), ஆயினும் யூதர்கள்மீது விசேஷித்த கவனம் தருகிறது (வசனங்கள் 9அ, 19அ, 20அ). [2]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 103. [3]இந்தப்பாடத்தில் எனது தலைப்புகள் பின்வரும் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன: R. W.

Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 95-97. [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 317. [5]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 15. [6]*இது, ஜான் மெக் ஆர்தர் என்பவர் எழுதிய புத்தகத்தில், ரோமர் 1-8 வரையிலான பகுதிக்கு விளக்கவுரையில் கலந்துரையாடப்பட்டுள்ளது,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 168; Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 153. [7]MacArthur, 169. [8]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 83. [9]James D. Smart, *Doorway to a New Age* (New York: N.p., 1972); quoted in Morris, 153, n. 7. [10]*நீங்கள் வாழும் பகுதியில் "பலமான, வல்லமை நிறைந்த விளக்கு" என்பது எதுவாக இருக்குமோ, அதைக் குறிப்பிடுங்கள். அது ஒரு வலிமைநிறைந்த பெருவிளக்காக அல்லது பேரொளிதரும் கைவிளக்காக இருக்கலாம்.*

[11]*The Analytical Greek Lexicon*, 314. [12]Edwards, 83. [13]*"அவமாக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (katargeo என்ற) கிரேக்க வார்த்தை ஒரு கூட்டுவார்த்தையாகும். வேலை என்பதற்கான (ergon என்ற) வார்த்தையானது எதிர்மறையாக்கப்பட்டு, (a), kata என்பதைக்கொண்டு வலுவூட்டப்பட்டுள்ளது. இது "வேலைசெய்யாதிருக்கக் காரணமாகுதல்," அதாவது செயல்பாடின்றியிருத்தல் என்று அடிப்படை அர்த்தம்தருகிறது* (Morris, 155, n. 17). [14]*"மோ" (எதிர்கால வினையைக் குறிக்கும் வினைமுற்றுச்சொல்) மூலவசனத்தில் இல்லை. கிரேக்க மொழியில் குறிப்பிட்ட இவ்வகையான வாக்கியம் மறைமுகமான பதிலைக் கொண்டிருந்தது என்பதால் இது மொழிபெயர்ப்பாளர்களால் இவ்விடத்தில் தரப்பட்டுள்ளது.* [15]*வார்த்தைகள் பற்றிய முந்திய படிப்பு ஒன்றில், நாம் pistis ("விசுவாசம்") என்பது சிலவேளைகளில் "விசுவாசம் நிறைந்த" (விசுவாசத்தால் நிரப்பப்பட்ட) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டோம்.* [16]Edwards, 88. [17]*"தேவன்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, கிரேக்க வசனத்தில் காணப்படுவதில்லை. பத்துக் கட்டளைகளுடன் வளர்ந்திருந்தவர் என்ற வகையில், பவுல் இவ்வகையான சொல்விளக்கத்தால் தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தி இருக்கமாட்டார்.* [18]*நீங்கள் வாழும் இடத்தில் ஒருவேளை இதைப்போன்றே சொல்விளக்கம் ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம்.* [19]*பழைய கைப்பிரதிகளில் சங்கீதம் 51க்குப் பின்வரும் தலைப்புள்ளது: "பத்சேபாளிடத்தில் தாவீது பாவத் திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடி, ராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்." இவ்வரலாறு 2 சாமுவேல் 12:1-15ல் காணப்படுகிறது.* [20]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 103.

[21]*(Sunistemi என்பதில் இருந்து) "விளங்கப்பண்ணினால்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, (sun ["உடன்"] என்பதுடன் istemi ["வைத்தல்"]) என்ற வார்த்தையை இணைத்துப் பெற்ற கூட்டுச்சொல்லாகும், இது ஒரு நபரை இன்னொரு நபருக்கு அறிமுகப்படுத்துதல் ("ஒன்று கூட்டி வைத்தல்") பற்றி சாதகமான வகையில் பேசப் பயன்படுத்தப்பட்டது.* AB *வேதாகமத்தில்* "our unrighteousness ... establishes and exhibits the righteousness of God" *என்றுள்ளது.* [22]"Is He?" *என்பது கிரேக்க வசனத்தில் இல்லை, ஆனால் கிரேக்க வசனக்கட்டுமா னத்தில் உள்ள வார்த்தைகள் இதை மறைமுகமாய் உணர்த்துகின்றன.* [23]*ஆதி யாகமம் 18:25ஐக் காணவும்.* [24]*2:1ஐக் காணவும்.* [25]*உங்கள் உரையைக் கேட்பவர்கள்*

*புரிந்துகொள்ளக்கூடிய விவரிப்புகளைப் பயன்படுத்தவும்.* [26]Adapted from Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 63. [27]Morris, 161. [28]Ibid., 157-58. [29]*இந்த மற்றும் இதற்கு அடுத்த பத்திகளின் தொடர்பாக, உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய விவரிப்புகளைப் பயன்படுத்துங்கள்.* [30]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 610.

[31]John Calvin, *The Epistle of Paul the Apostle to the Romans,* trans. and ed. John Owen (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1948), 116. [32]Edwards, 85. [33]*உங்கள் நாட்டில் நடைபெறும் நீதிமன்ற விவாதமுறைகளுக்கேற்றபடி இதைத் தழுவியமைத்துக்கொள்ளுங்கள்.*